1995 ஏப்ரல் 6]
252—

வேளாண்மை அபிவிருத்தித் திட்டங்களில் முன்னேற்றம்.

***35969**—திரு. ஆ. சுப்புரத்தினம்:

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாவட்ட ஆட்சித் தலைவர்களின் நேர்முக உதவியாளர்களாக வேளாண்மைத்துறை துணை இயக்குநர்கள் நியமனம் செய்யப்பட்ட பிறகு வேளாண்மை அபிவிருத்தித் திட்டங்களில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மாவட்ட ஆட்சித் தலைவர்களின் நேர்முக உதவியாளர்களாக வேளாண்மைத் துறை துணை இயக்குநர்கள் நியமனம் செய்யப்பட்ட பிறகு, வேளாண்மை அபிவிருத்தித் திட்டங்களில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

(ஆ) நேர்முக உதவியாளர்கள் (வேளாண்மைத் துணை இயக்குநர்) பணியமர்த்தப்பட்டதிலிருந்து 45 பயிர்களுக்கு மட்டுமே சாகுபடி பரப்பினை ஒத்திசைவு செய்து வந்ததை 92 பயிர்களுக்காக உயர்த்தப்பட்டது. இதனால் பல்வேறு பயிர்கள் சாகுபடிப் பரப்பை, சாகுபடி கணக்கிலிருந்து விடுபடாமல், கண்காணிக்கவும் ஏதுவாயிற்று.

மாதந்தோறும் மூன்றாவது வெள்ளிக்கிழமை அன்று விவசாயிகளின் குறை தீர்க்கும் நாள் கூட்டம் தவறாமல் நடத்தப்படுகிறது.

எரிபொருளுக்கு பயன்படும் மரம் மற்றும் இதர வகைபொருட்களின் அதிகரித்து வரும் தேவையை ஈடு செய்யவும், பின்தங்கியுள்ள மக்கள், மலைவாழ் மக்கள் மற்றும் நிலம் இல்லாத வேளாண்மைத் தொழிலாளர்களின் வேலைவாய்ப்பினை அதிகரிக்கும் நோக்கத்துடன் அரசுக்கு 25 கருத்துருக்களை அனுப்பியுள்ளனர். அவற்றில் குறைபாடுகள் சில கருத்துருக்களை அரசு திருப்பியனுப்பியுள்ளது. அதனை நிவர்த்தி செய்து மீண்டும் அரசுக்கு அனுப்ப சம்பந்தப்பட்ட நேர்முக உதவியாளர்கள் மூலம் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

சென்னை மற்றும் நீலகிரி மாவட்டங்கள் தவிர மற்ற அனைத்து மாவட்டங்களிலும் வேளாண்மை வளர்ச்சித் திட்டப் பணியில் நேர்முக உதவியாளர்கள் (வேளாண்மை துணை இயக்குநர்கள்) ஒரு முக்கிய அங்கமாக விளங்குகின்றார்கள்.

திரு. ஆ. சுப்புரத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய ஒப்பற்ற முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பு ஏற்பதற்கு முன்னால் இப்பதவி தமிழகத்தில் இருந்ததா அல்லது புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில் புதிதாக ஏற்படுத்தப்பட்டதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் புரட்சிப் பணி, இந்தியத் துணைக் கண்டத்திலேயே தமிழகத்தில்தான் நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவியின் ஆட்சிக் காலத்திலேதான் எற்படுத்தப்பட்டது.

திரு. ஆ. சுப்புரத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற மாநிலங்களில் இது போன்ற பதவி உள்ளதா? திண்டுக்கல், அண்ணா மாவட்டத்தைப் பொறுத்தவரையில் சிறிய அளவில் என்ன என்ன பணிகளை இந்த நேர்முக உதவியாளர்கள் மேற்கொள்கிறார்கள் என்பதைக் குறிப்பாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாநிலத்தில் செயல்படுத்தப்படுகின்ற இந்தத் திட்டத்தை பிற மாநில அரசுகள் செயல்படுத்த இன்றைக்கு முன் வந்து இருக்கின்றன. குறிப்பாக உத்திரப் பிரதேசம், பீகார், மத்தியப் பிரதேசம் போன்ற மாநில அரசுகள் நம்முடைய அரசாணையினுடைய நகலை இன்றைக்கு எழுத்து மூலமாக எழுதிப் பெற்றிருக்கிறார்கள். ஒவ்வொரு மாவட்டத்திலும் அந்த மாநிலத்தில் உள்ள விவசாயிகளுக்கு ஏற்படக் கூடிய பிரச்;கினைகளை வெகுவாகத் தீர்ப்பதற்காகத்தான் இந்தப் பணியிடங்கள் புரட்சித் தலைவி அவர்களால் ஏற்படுத்தப்பட்டது. குறிப்பாக எல்லா மாவட்டங்களிலும் அவர்களுடைய பணி சிறப்பாக இருக்கிறது. குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும் என்று சொன்னால், மதுரை மாவட்டத்தில் மல்லிகை ஏற்றுமதி செய்வதற்கு 1.25 ஏக்கர் நிலத்தில் குளிர்ப்பதன அறைக் கட்டுவதற்கு இன்றைக்கு நிலம் கையகப்படுத்தப்பட்டிருக்கிறது. திண்டுக்கல் அண்ணா மாவட்டத்தைப் பொறுத்தமட்டிலே 4.500 எக்டேரில் சாகுபடியாகும் வெங்காயத்தின் தரத்தை மேம்படுத்தி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் வாய்ப்பை ஏற்படுத்துவதும் அதற்குரிய தொகையாக 198.83 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்வதற்கு அரசுக்கு இவர்கள் பிரேரணை அனுப்பியிருக்கிறார்கள்.

1995 ஏப்ரல் 6]

அதனைப் போல திண்டுக்கல் அண்ணா மாவட்டத்தில் பூண்டு பயிரிடும் விவசாயிகள் அவர்களுடைய விளைப் பொருள்களுக்கு அதிக விலைக் கிடைப்பதற்கு ஏதுவாக கொடைக்கானலில் ஒரு ஒழுங்கு முறை விற்பனை மையம் அமைக்க கருத்துரு இன்றைக்கு வந்திருக்கிறது. எல்லா மாவட்டங்களிலும் பல்வேறு கருத்துக்கள் வந்திருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. நா. சா. பழனிசாமி.

முற்பகல் 10.45

திரு. நா.சா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளராக நியமிக்கப்பட்டிருக்கின்ற துணை வேளாண்மை இயக்குநர்கள் அந்த மாவட்டத்தில் வேளாண்மைத் தொழில் செய்பவர்களுக்கும் பிற தொழில் செய்பவர்களுக்கும் இடையில் ஏற்படுகின்ற பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு உதவுவார்களா? எங்கள் கோவை மாவட்டத்திலே காரைமடை சுற்று வட்டாரப் பகுதியிலே செண்டுமல்லி சாகுபடி செய்ய சிந்தட்டிக் கம்பெனி என்று ஒரு கம்பெனி அதிலே ஒப்பந்தம் செய்து, ஆனால் கொள்முதல் செய்யாமல் அவர்கள் இப்போது அதைத் தவிர்த்து வருகிறார்கள். அதனால் பிரச்சினைகள் உருவாகி பல போராட்டங்களை எல்லாம் பல்வேறு இயக்கங்களும் நடத்திக்கொண்டிருக்கின்றன. இந்த துணை இயக்குநர் அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு உதவியாக இருக்கின்ற அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவரை இணைத்து பேச வைத்து அந்தச் செண்டுமல்லி உற்பத்தியாளர்களை பாதுகாக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தந்த மாவட்டத்திலே விவசாயிகளுக்கு ஏற்படக்கூடிய பிரச்சினைகளை அவர்களுடையத் தேவைகளை இந்தத் துணை இயக்குநர்கள் அறிந்து உடனடியாக மாவட்ட ஆட்சித் தலைவருடைய கவனத்திற்கு கொண்டு சென்று ஒரு முத்தரப்புக் கூட்டத்தை நடத்தி பல்வேறு பிரச்சினைகளை இன்றைக்குத் தீர்த்து இருக்கிறார்கள். எனவே இந்தக் கருத்துருவும் இன்றைக்கு அரசுக்கு வந்திருக்கிறது. உரிய நடவடிக்கை எடுக்க அரசும் அறிவுரை வழங்கியிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் எஸ். சுந்தரராஜ்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவரும் மற்றும் வேளாண்மைத் துணை இயக்குநர் அவர்களால் நடத்தப்படுகின்ற விவசாய குறை தீர்க்கும் நாட்களில் ஏற்கப்படுகின்ற

கோரிக்கைகளை வேளாண்மைத் துறை இயக்குநர் அவர்கள் ஆய்வு செய்கிறார்களா அல்லது அதன்மூலம் எடுக்கப்படுகின்ற குறைகளை நீக்குவதற்கு இந்த வேளாண்மைத் துறை எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுக்கு ஏற்படக்கூடிய பிரச்சினைகளை களைவதற்காகத்தான் ஒவ்வொரு மாதமும் மூன்றாவது வாரத்தில் வெள்ளிக்கிழமை அன்று விவசாயிகளுடைய குறை தீர்க்கும் நாள் நடத்தப்படுகிறது. அந்தக் கூட்டங்களிலே விவசாயிகளுடைய நியாயமான கோரிக்கைகளை அரசு இன்றைக்குப் பரிசீலத்து வந்திருக்கிறது. உரிய நடவடிக்கை எடுத்து வந்திருக்கிறது. ஆனால் சில விவசாயிகள் சங்கத் தலைவர்கள் எல்லாம் விவசாயிகளுக்கு அப்பாற்பட்ட பிரச்சினையை அரசியல் நோக்கோடு அரசியல் ஆதாயம் தேட வேண்டும் என்ற நோக்கிலே பேசுகிறார்கள் என்று சொன்னால் அதற்கெல்லாம் அவர்கள் தீர்வு காணமுடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 253, திரு. ஏ. ரவிக்குமார், மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர்.

253—

பொன்னேரி தொகுதியில் பால் விநியோகம்

***15996**—*திரு ஏ. ரவிக்குமார்:*

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொன்னேரி தொகுதியில், மீஞ்சூர், மொண்டியம்மன் நகர் போன்ற பகுதிகளில் பால் விநியோக டெப்போக்கள் திறப்பதற்கு அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது திறக்கப்படும்?

மாண்புமிகு திரு. ஜனார்தனன், பால் வளத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : சென்னை-செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம், பொன்னேரி தொகுதியில் பாடியநல்லூர், பொன்னேரி, மீஞ்சூர் ஆகிய பகுதிகளில் முகவர்களை